**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 226/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | சரோஜா |
| Husband Name | : | தட்சணாமூர்த்தி |
| Village | : | வெள்ளாத்தான்கரைபுதூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 43 |

**A1 called absent. 317 petition filed. A2 and A3 are present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.04.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெள்ளாத்தான்கரைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டின் அருகில் மணி என்பவர் குடியிருந்து வருகிறார். மணி கூலி வேலைக்கு சென்றுவிடுவார். மணியின் கணவர் தேங்காய் விற்கும் வேலைக்கு சென்று வருவார். கடந்த 13.05.2024 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது பக்கத்து வீடான மணி வீட்டில் தட்டும் சத்தம் கேட்டது. ஒத்த ஆளாக பார்க்க பயமாக இருந்ததால் பக்கத்து வீட்டு கவிதாவையும் துணைக்கு அழைத்துக்கொண்டு சென்று பார்த்தேன். நான் கவிதாவை கூட்டி வந்து பார்ப்பதற்குள் அந்த வீட்டைத் தட்டிக்கொண்டிருந்த மூன்று நபர்கள் வீட்டைத்தாண்டி சென்றுவிட்டார்கள். பின்னர் தோட்டத்துக்காரருக்கு போன் செய்து தகவல் சொன்னேன். அவர்கள் வந்து பார்த்தபோது வீடு திறந்து கிடந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைந்து கிடந்தது. அதில் அவர் வைத்திருந்த பணம் ரூ.1,30,000/– காணவில்லை. பின்னர் அவரது மகனுக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். வீட்டின் பீரோவை தட்டிக்கொண்டிருந்தவர்கள் நாங்கள் வருவதற்குள் சென்று விட்டதால் அவர்களை பார்க்க முடியவில்லை. பின்னர் மணி பேலீசிடம் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் மணி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். எனது ஊரில் சுமார் 25 வீடு உள்ளது என்றால் சரிதான். நடைபெற்ற சம்பவம் குறித்து நான்தான் மணிக்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். மணியிடம் தகவல் சொல்லும்போது மூன்று நபர்கள் வந்ததாக கூறினேனா என்றால் கூறினேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.10 18:24:51 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 226/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | ரவி |
| Father Name | : | பொன்னுச்சாமி |
| Village | : | வெள்ளாத்தான்கரைபுதூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 46 |

A1 called absent. 317 petition filed. A2 and A3 are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளாத்தான்கரைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மணி எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 13.05.2024 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் வெள்ளாத்தான்கரைபுதூரில் திருட்டு போனது சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் மற்றொரு நபரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்த என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது அ.சா.1 மணி எனது ஊர்க்காரர் என்பதால் சம்பவ

இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.10 18:25:00 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்